# பதினெட்டுதமிழர்கள்ராணுவத்தால்சுட்டுக்கொலை!


விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 24 இதழ் 148
யாழ்ப்பாணம் புதன்கிழமை 08 07 1992


(அம்பாறை)
அம்பாறையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சுற்றி வளைப்பு ஒன்றில் பதினெட்டு தமிழர்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கண்மூடித்தனமாக சுட்டுக் கொலைப்பட்டனர்.

முஸ்லிம் காடையர்களினதும், இராணுவத்தினரதும் துன்புறுத்தலை அடுத்து அம்

[4ம் பக்கம் பார்க்க]

## 9 தேச விரோதிகளுக்கு வவுனியாவில் மரணதண்டனை

(யாழ்ப்பாணம்)
தாய்நாட்டைக் காட்டிக் கொடுத்த ஒன்பது தேச விரோதிகளுக்கு நேற்றுமுன் தினம் வவுனியாவில் வைத்து விடுதலைப் புலிகளால் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

வவுனியாவில் விடுதலைப்புலிகளின் தடைமுகாம் அருகில் வைத்து இந்த ஒன்பது உள

(4-ம் பக்கம் பார்க்க)

## வழிமறித்து தாக்குதல் 3 படையினர் பலி 18 பேர் படுகாயம்

(கொழும்பு)
புல்லாவெளிப்பகுதியிலிருந்து முன்னேறிய படையினரை புலிகள் நேற்றுமுன் தினம் வழி மறித்து தாக்கியதில் 3 படையினர் கொல்லப்பட்டு 18 படையினர் படுகாயமடைந்ததாக

[4-ம் பக்கம் பார்க்க]

★ 'பலவேகய'வை மேலும் தொடர்வதற்கு

# இராணுவ பலத்தை அதிகரிக்க படையினர் தரப்பில் முடிவு

## ஆயுத தளபாடங்களும் குவிக்கப்படும்

(கொழும்பு)
ஆனையிறவை நோக்கி முன்னேறும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட பலவேகய - 2 இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து நடத்துவதற்கு இராணுவ தளபாடங்களும் படையினரது தொகையும் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பலவேகய 2 இராணுவத் தாக்குதலில் புலிகளின் தாக்குதலினால் பலத்த உயிர்ச் சேதங்களையும், இராணுவத் தளபாடங்களையும் இழந்துள்ள சிறிலங்கா படைகள் இராணுவ நடவடிக்கையைத் தொடர முடியாது பின்தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

தற்போது இந்த இராணுவ

[4-ம் பக்கம் பார்க்க]

★ எட்டு நாள் போரில்

## 86 ராணுவம் பலி 280 பேர் காயம்

(கொழும்பு)
ஒபரேஷன பலவேகய II ல் கடந்த 8 நாட்களில் 86 படையினர் கொல்லப்பட்டும் 280க்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்துள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இம்மோதலில் புலிகள் மிகக் கடும் எதிர்த் தாக்குதலை தொடுப்பதாகவும் படையினரின் முன்னேற்றம் இதனால் தடைப்பட்டு வருவதாகவும்

[4-ம் பக்கம் பார்க்க]

## "வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு அரசியல்தீர்வு அவசியம்" அமைச்சர் ரணில்

(கொழும்பு)
''வடக்கு-கிழக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி அரசியல் தீர்வு காணவேண்டியது அவசியமாகும்'' கைத்தொழில் விஞ்ஞானத் தொழில்துறை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு அறவிடு திருத்தச் சட்டமூலம் பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாதுகாப்பு மற்றும் அகதிகள் விவகாரம் தொடர்பாக செலவினம் அதிகரித்து வருவதாகவும் யதார்த்த நிலையை நன்குணர்ந்து அனைவரும் செயற்படவேண்டும் என்றும் தெரிவித்தார். (க)

## பிரபாதொடர்பாக இந்திய இணையமைச்சர் பிரேமாவுடன் பேசுவார்

[சென்னை]
விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனை இந்தியாவுக்கு அனுப்பிவைப்பது தொடர்பாக இலங்கைஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுடன் விரிவான முறையில் விவாதிக்கவிருப்பதாக இந்திய வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. எட்வர்டோ பெலரடோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெறவிருக்கும் வெளியுறவு அமைச்சர்கள் கலந்துகொள்ளும் 'சார்க்' மாநாட்டில் கலந்துகொள்ளுமுகமாக சென்னைக்கு வந்த அவர் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பத்திரிகையாளர் மத்தியில் நேற்று உரையாற்றும்போது

[4-ம் பக்கம் பார்க்க]

## பீரங்கி தாக்குதல்

[யாழ்ப்பாணம்]
மண்டைதீவுக் கடல் பிராந்தியத்தில் இருந்து நேற்று மாலை 5-40 மணியளவில் யாழ். நகர் நோக்கி 50 கலிபா தாக்குதல்களைப் படையினர் மேற்கொண்டனர்.

10 நிமிடங்கள் வரை இத் தாக்குதலைப் படையினர் மேற்கொண்டனர். [56]

## முன்னேறிவந்த படையினர் புலிகளால் விரட்டியடிப்பு

(மட்டுநகர்)
மட்டக்களப்பிலுள்ள பெண்டுகள் சேனை என்ற இடத்திலுள்ள விடுதலைப் புலிகளின் முகாமைத் தாக்கி அழிக்கும் நோக்குடன் முன்னேறி வந்த படையினர் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் காலை 9-35 மணியளவில் மட்டு. வாகனேரி இராணுவமுகாமிலிருந்தும், புலைபாய்ந்தகல் இராணுவ முகாமிலிருந்தும்

(4ம் பக்கம் பார்க்க)

## 13 புலிகள் வீரச்சாவு

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பு பெண்டுகள் சேனையில் இராணுவத்துடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் 13 புலிகள் வீரச் சாவு அடைந்தனர்.

வீரச் சாவு அடைந்தவர்கள் விபரம்: கப்டன் ரமணி [தம்பிமுத்து நாகேந்திரன்,

[4-ம் பக்கம் பார்க்க]

★ தமிழ் கட்சிகளின்

## நான்கு அம்சத் திட்டத்தை சுதந்திரக்கட்சி நிராகரித்தது

(கொழும்பு)
தெரிவுக் குழு முன் தமிழ்க் கட்சிகள் முன்வைத்திருக்கும் 4 அம்சத் திட்டத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நிராகரித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்படி கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் இவ்வாறு நிராகரிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

தெரிவுக் குழு முன், முன்னர் அமைச்சர் தொண்டமான் முன்வைத்த திட்டம் உட்பட வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்து, சகல திட்டங்களையும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நிராகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது (சி)

## நவசமசமாஜக் கட்சி ஆதரவு

[கொழும்பு]
தெரிவுக் குழு முன் தமிழ்க் கட்சிகள் முன்வைத்த 4 அம்சத் திட்டத்தை, நவ சமசமாஜக்கட்சி ஆதரித்துள்ளது.

இது குறித்து மேற்படி கட்சியின் செயலர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்ன அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

இத்திட்டத்தைத் தமது கட்சி முழுமையாக ஆதரிப்பதாகவும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் (சி)

## அ. தி. மு. க. தொண்டர் கத்தியால் குத்திக்கொலை

[சென்னை)
அ. தி. மு. க. தொண்டரான ஆர். பாண்டியன் நேற்றுக்காலை சென்னையில் இனம் தெரியாத சிலரால் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார்.

திரு. பாண்டியன் தனது மனைவியுடன் காரில் பயணம் செய்து கொண்டிருந்தபோது ஓட்டோ ரிக்ஷாவில் வந்து இறங்கிய 6 பேரால் கத்தியால் பலதடவை குத்தப்பட்டு கொல்லப்பட்டார். அவரது மனைவி காயங்களுடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கொலைக்கான காரணம்

(4ம் பக்கம் பார்க்க)

## மஹோற்சவம்

[யாழ்ப்பாணம்]

வண்ணை ஐயனார் கோவிலடி விசுவேசுர பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த சனிக்கிழமை தொடக்கம் கொடியேற்றத்துடன் நடைபெறுகின்றது எதிர்வரும் 12-ம் திகதி ரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## பங்கீட்டு அட்டைகள்

(புங்குடுதீவு]

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்கள் அனைவரும் தமது பங்கீட்டு அட்டைகளை இன்று அந்தந்த கிளைகளில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.


உ

## யா/வைத்தீஸ்வரக் கல்லூரி அபிவிருத்திச் சங்கம்

இச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம், 19-07-1992 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10-00 மணிக்குக் கல்லூரியின் விவேகானந்த மண்டபத்தில் நடைபெறும்.

பெற்றோர்கள் அனைவரையும் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: கல்லூரி அபிவிருத்திச்சபையில் இடம் பெறவேண்டிய பெற்றோரின் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவர்.

சி. சிவசரவணபவன் — தலைவர்
தி. லோகநாதன் — செயலாளர்

(எ-2277)



## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

### நடிகமணி வீ. வீ. வைரமுத்து

மண்ணரங்கில்: 11-02-1924
விண்ணரங்கில்: 08-07-1989

மரபுவழி தவறாத நாடகக் கலையை வளர்ப்பதற்காக மேடைகளில் அரிச்சந்திரனாக, நந்தனாராக, கோவலனாக, சத்தியவானாக, சாரங்கதரனாக, அந்திராசியாக, பிலேந்திரனாக, நல்லண்ணனாக, அர்ச்சுனனாக, முருகனாக, வேடனாக, விருத்தனாக வேடங்கள் பூண்டு தனது கணீர் என்ற குரலில் பாடி நடித்து தமிழ்க் கலை உலகிற்கு இரவு பகல் பாராது ஓயாது இறுதி மூச்சுவரை சேவைசெய்த எங்கள் ஐயாவை என்றுதான் காண்போம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
(எ-6505) பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## 1ம், 2ம், 3ம், 4ம் கல்வியாண்டு பரீட்சைகள் - 1991

### கலை/ வர்த்தகம்/ முகாமைத்துவம்

மேற்படி பரீட்சைகள் யாவும் கீழ்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன. மாணவர்கள் கவனத்திற்கு கொள்ளவும்.

| பரீட்சை | தொடங்கும் திகதி | முடிவடையும் திகதி |
|---|---|---|
| 1-ம் ஆண்டு கலை/ வர்த்தகம்/ முகாமைத்துவம் | 17-08-92 | 25-08-92 |
| 2-ம் ஆண்டு பொது/ சிறப்பு-பகுதி 1 கலை/ வர்த்தகம்/ முகாமைத்துவம்/ முதுமெய்யியல்மாணி-தகுதிகாண் தேர்வு | 26-08-92 | 07-09-92 |
| 3-ம் ஆண்டு பொது/சிறப்பு-பகுதி 2 கலை/ வர்த்தகம்/ முகாமைத்துவம்/ முதுமெய்யியல்மாணி-தகுதிகாண் தேர்வு | 08-09-92 | 21-09-92 |
| 4-ம் ஆண்டு சிறப்பு- பகுதி 3 கலை/ வர்த்தகம்/ முகாமைத்துவம்/ முதுமெய்யியல்மாணி-தகுதிகாண்தேர்வு. | 22-09-92 | 26-09-92 |

பதிவாளர்.

(எ-2276)


## இன்று

(உடுவில்)

ஆறாம் ஆண்டுக்குமேல் பாடசாலைகளில் சித்திர பாடக் கருத்தரங்கு ஒன்று இன்று எட்டாம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்தில் நடைபெறும். (109)

## நோயாளர்கள் அதிகரிப்பு

(அரியாலை)

தற்போதுள்ள யுத்த நிலை பதற்றம் காரணமாக பலவித நோய்களால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு தினமும் பெரும் எண்ணிக்கையில் நோயாளிகள் வருகின்றனர். வெளி நோயாளர் பிரிவு – மருத்துவ சோதனைப்பிரிவு ஆகியவற்றில் சிறுவர்கள், வயோதிபர்கள், பெண்கள் ஆகியோர் அதிகமாகக் காணக்கூடியதாக இருக்கிறது. (59)

## சைக்கிள் திருட்டு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு-நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் இருவரின் சைக்கிள்கள் திருடப்பட்டன,

கடந்த முதலாம் திகதி காலை மேற்படி சங்கக் கிளையொன்றில் பாவனையாளர்களுக்கு மண்ணெண்ணை விநியோகித்துக் கொண்டிருந்த ந. அகிலேஸ்வரன் என்ற ஊழியரின் 'லுமாலா' சைக்கிள் திருடப்பட்டது.

அதேதினம் இரவு மேற்படி சங்க லொறிச் சாரதியான வே. நடராசா என்பவரின் 'றெலன்சன்' சைக்கிள் அவரது வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது திருடப்பட்டது. (101)

## முச்சக்கரவண்டி அன்பளிப்பு

(புங்குடுதீவு]

நாவற்குழி 'லவனிதா' குடியேற்றத்தில் வசிக்கும் மக்களுக்கென தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் முச்சக்கர வண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. நடக்க முடியாத நோயாளிகளை வைத்தியசாலைக்கு ஏற்றிச்செல்ல இது உபயோகப்படுத்தப்படும்.

## இராசி பலன்

08-07-1992

புதன்கிழமை

(தமிழுக்கு ஆனி 24)

நவமி மு. இ 11-20 வரை. சித்திரை பி. ப, 4. 01 வரை. சித்தயோகம், இராகு காலம் 11-58 முதல் 1-28 வரை. சுப நேரம் மாலை 4-28 முதல் 5-28 வரை

மேடம்: தொழில் வழி சிந்தனை, குடும்ப மகிழ்ச்சி, காரிய சித்தி.

இடபம்: மேலதிகாரிகள் அன்பு, போட்டிகளில்வெற்றி, புகழ்.

மிதுனம்: கூட்டன் பகை, வாழ்க்கைப் புதிர், அதிக செலவு.

கடகம்: முயற்சித் தடை, மனச்சங்கடம், வெறுப்பு.

சிங்கம்: வாக்கில்விறுவிறுப்பு. பணவரவு, புதிய முதலீடு.

கன்னி: கடமை பாதிப்பு, இனசனப் பங்க அலைச்சல்.

துலாம்: சுபகாரியம் நினைத்தது கைகூடும், பயணம்.

விருச்சிகம்: கஞ்சத் தனம், ஏமாற்றம், குடும்பப் பிரிவு.

தனுசு: வீண் யோசனை, தொழில் லாபம், வெகுசனப் பணி.

மகரம்: இனிய சந்திப்பு, இடம்பெயர்வு, அதிகாரம்.

கும்பம்: குடும்பச் சிக்கல், சகோதர துன்பம், ஞாபக மறதி.

மீனம்: வேண்டாத தொல்லை, படபடப்பு, மனச் சுமை.

ஜோஸ்யர்

# ஏழு வைத்திய அதிகாரிகள் நியமனம்

(பண்டத்தரிப்பு)

யாழ். பிராந்திய சுகாதாரப் பிரிவில் ஏழு புதிய உதவி வைத்திய அதிகாரிகளுக்கு ஜூலை 1ம் திகதி தொடக்கம் நியமனம்வழங்கப்பட்டுள்ளது.

1986ம் ஆண்டில் உதவி வைத்திய அதிகாரி பதவிக்கான பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட இவர்கள் அண்மையில் இறுதிப்பரீட்சையில் சித்திபெற்றுள்ளதை அடுத்து வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. (72)

# அகதிகளுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு

[பண்டத்தரிப்பு]

மாதகல், இளவாலை, முள்ளானை, மாரீசன்கூடல் ஆகிய இடங்களில் இருந்துஇராணுவ நடவடிக்கை அச்சம் காரணமாக வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து அகதிகளாக தஞ்சமடைந்திருக்கும் சகல மக்களுக்கும் நிவாரணமாக உணவுப்பொருள்களை வழங்குவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு. ஹெக்டர் ஜோசவ் மேலிடத்துடன் தொடர்புகொண்டுஇதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளார். பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் இவர்களுக்கான நிவாரணப்பொருள்களை விரைவில் வழங்கவுள்ளது (72)

## போராட்ட சூழ்நிலையில் சாரணியத்தின் மகத்துவம் பெரிதும் உணரப்படுகிறது!

(காங்கேசன்துறை)

"இன்றைய போராட்டச் சூழ்நிலையில் சாரணியத்தின் மகத்துவம் உணரப்படுகிறது. துன்பப்படும்மக்களுக்கு உதவவும் போரில் காயமுறுவோரைப் பராமரிக்கவும் ஏனைய தொண்டர் அமைப்புக்களை விட சாரணர்கள் பெரிதும் சேவையாற்றி பாராட்டுகளை பெற்றுள்ளனர்.

இவ்வாறு இணுவில் சைவ மகாஜன மகாவித்தியாலயத்தில் சாரணீயம் ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவுறுவதையொட்டி நடந்த விழாவில் கலந்துகொண்டு பேசிய காங்கேசன்துறை மாவட்ட சாரண ஆணையாளர் திரு. நா. போஜன் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்: சாரணர்கள் தமது சாரணீய உறுதிக்கோள்களுடன் மண் பற்றையும் குறிப்பாகப் பேணி அதைக் காக்க தம்மாலான பணியை ஆற்றவேண்டும்" என்றார். (86)

## விசேட உத்தரவு பத்திரம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்தபோது நிவாரணஅட்டைகளை தொலைத்தவர்களுக்கு விசேட உத்தரவுப் பத்திரம் மூலமாக நிவாரணம் வழங்குவதற்குஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது நிவாரணம் பெறுவதில் எவ்வித கஷ்டமும் இல்லையென தெரிவிக்கப்படுகிறது.

## மண்ணெண்ணை இலவசம்

(பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் ஆடிப்போக பயறு செய்கையில் ஈடுபடும் நூறு விவசாயிகளுக்கு இலவசமாக மண்ணெண்ணையை வழங்குவதென்று தீர்மானித்துள்ளது.

போஷாக்கு மிக்க உள்ளூர் பயறு உற்பத்தியை ஊக்குவிக்குமுகமாகவே இந்த மண்ணெண்ணையை வழங்குவதென சங்கநிர்வாகம் தீர்மானித்துள்ளது.

## விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு கொழும்பிலிருந்து லொறிகளில் மண்ணெண்ணை இங்கு வந்து சேர்ந்ததும் பங்கீட்டு அடிப்படையில் பாவனையாளர்களுக்கு சங்கத்தின் கிளைகள் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளது. [72)

## குஜராத்தில் வேலைநிறுத்தம்

(அகமதாபாத்)

குஜராத்தில் நடைபெற்ற வேலைநிறுத்தத்தில் பல அரச தனியார் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டன.

கடந்த 3 நாட்களாக நடந்த இந்து-முஸ்லிம் கலவரங்களால் 20 பேர் பலியாகியதை எதிர்த்து இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

கடைகள், பாடசாலைகள், பங்குச்சந்தைகள் மற்றும் அரச நிறுவனங்கள் எல்லாம் மூடப்பட்டிருந்தன. (கே)

## இல்ல விளையாட்டுப் போட்டி

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி கடந்த 4ந் திகதி பிற்பகல் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் செ. கேசவராசன் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டிகளில் சம்பந்தர் இல்லம் முதலாம் இடத்தையும, மாணிக்கர் இல்லம் இரண்டாவது இடத்தையும் மூன்றாம் நாலாம் இடங்களை முறையே வாகீசர், சுந்தரர் இல்லங்களும் பெற்றுக்கொண்டன(71)

## மாவீரர் நற்பணி மன்றம்

(புங்குடுதீவு)

நாவற்குழி 'லவனிதா' குடியேற்றத் திட்டத்தில் வசிக்கும் மக்களுக்கென புதிதாக அமைக்கப்பட்ட படிப்பகம் மற்றும் மாவீரர் நற்பணி மன்றம் ஆகியவற்றின் திறப்பு விழாவும், மாவீரர் ஸ்டீபனின் அஞ்சலிக் கூட்டமும் அண்மையில் நடைபெற்றன,

மேற்படி திறப்பு விழாவில் நற்பணி மன்றத்தை மாவீரரின் பெற்றோரும், படிப்பகத்தினை தீவக தளபதி திரு. செழியனும் திறந்து வைத்தனர்.

அஞ்சலிக் கூட்டத்தில் தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சேரலாதன், மகளிர் முன்னணியின் தீவக உதவிப் பொறுப்பாளர் செல்வி கயல்விழி உட்பட பலர் அஞ்சலி உரைகள் நிகழ்த்தினார்கள். [101]

# மேதின எழுச்சியில் பரிசுபெறும் ஊர்திகள்

(யாழ்ப்பாணம்)

பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சி நாளான 1992ஆம் ஆண்டின் மே நாளன்று, விடுதலைப்புலிகளால் யாழ்.மாவட்டத்தில் நடாத்தப்பட்ட மக்கள் பேரணியில் சிறப்பாகக் கலந்துகொண்ட அலங்கார ஊர்திகளுள் 10 ஊர்திகள் பரிசில்கள் பெறுவதற்கு தகுதியானவையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட ஊர்திகளின் விபரம் வருமாறு;

முதலாம் இடம்: ஊர்தி இலக்கம்: 142 தென் தமிழீழத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் கெடுபிடிகளால் மக்கள்படும் அல்லல்களை சித்தரிப்பதாக அமைந்திருந்தது. வலிமேற்கு சண்டிலிப்பாய்-பண்டத்தரிப்பு

இரண்டாம் இடம்: ஊர்தி இலக்கம்: 100, தமிழீழத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் அட்டூழியங்கள் (மதி ஒளி சனசமூக நிலையம், கொடிகாமம்

மூன்றாவது இடம்: ஊர்தி இலக்கம் 150, ஸ்ரீலங்காப் படையினரின் தாக்குதல்களினால் குடியிருக்கமுடியாமல் இடம்பெயர்ந்த மக்கள்படும் இன்னல்களைச் சித்தரிப்பதானது (இடம்பெயர்ந்தோர் நலன்காக்கும் பிரிவு, தீவகம்)

நான்காவது இடம்; ஊர்தி இலக்கம்: 73, சிறிலங்கா (கொழும்பு) தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களின் உயர்ந்த நிலையையும், தமிழீழ [யாழ்ப்பாண] தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களின் தாழ்ந்த நிலையையும் ஒப்பீடு செய்வதாய் அமைந்திருந்தது. [அதாவது ஸ்ரீலங்கா இனவாத அரசின் புறக்கணிப்பு, யாழ். தொழில் நுட்பக கல்லூரி, கொக்குவில்)

ஐந்தாவது இடம்: ஊர்தி இலக்கம்: 50, சிறிலங்காப் படையினரின் அடக்கு ஒடுக்கு முறைகளால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தென் தமிழீழத்தின் இன்றையநிலைப்பாடு. (உடுவில் தமிழ்மொழி சனசமூக நிலையம்)

ஆறுவது இடம்: ஊர்தி இலக்கம் 118, தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாறு பற்றிய வில்லுப்பாட்டு (தென்மராட்சி ஆய்வு நிறுவனம்

ஏழாவது இடம்: ஊர்தி இலக்கம்: 141, தமிழீழ கிராமமொன்றில் சிறிலங்கா இராணுவத்தினரின் கொடுமைகள் (பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கம்)

எட்டாவது இடம்; ஊர்தி இலக்கம்: 63, தமிழர்களின் கலைத்துவத்தைப் பிரதிபலிக்கும் தேர் (சங்கானை வர்த்தகர் சங்கம்)

ஒன்பதாவது இடம்: ஊர்தி இலக்கம்: 152, இந்திய இராணுவ நடவடிக்கையின்போது அவர்கள் இழைத்த அட்டூழியங்கள் (கோப்பாய்வட்டவை)

பத்தாவது இடம்: ஊர்தி இலக்கம்: 77, தமிழீழ பாட்டாளி வர்ககம் இன்றுபடும் அவலநிலை (கைதடி தெற்கு சனசமூக நிலையம்),

தெரிவு செய்யப்பட்ட பத்து அலங்கார ஊர்திகளுள் முதல் மூன்று [1ம். 2ம், 3ம் ஊர்திகளுக்குத் தங்கப்பதக்கங்களும் மற்றைய ஏழு ஊர்திகளுக்கும் ஆறுதல் பரிசுகள் வழங்கப்படுமென்றும் பரிசில்கள் வழங்கப்படும் இடம், காலம் பின்னர் அறிவிக்கப்படுமென்றும் விடுதலைப் புலிகள், யாழ். மாவட்ட செயலகம் விடுத்துள்ள அறிக்கைக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பரிசிற்குரியவர்களை அரசியல் பிரிவு மாவட்டச் செயலகம், கோண்டாவிலில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## ஆகஸ்ட்டில் ராஜீவ் கொலை வழக்கு

(புதுடில்லி)

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கு விசாரணை ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

49 பக்க குற்றப்பத்திரத்திற்கு இணையான 20 ஆயிரம் ஆவணங்கள் பிரதி செய்யப்படுகின்றன என்றும் ஜூலை மாதத்துடன் இவ்வேலை பூர்த்தியாகிவிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## பல்கலைக்கழக பேராசிரியர் காஷ்மீரில் கடத்தப்பட்டார்

(காஷ்மீர்)

ஜம்மு-காஷ்மீர் தீவிரவாதிகளால் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் கடத்திச்செல்லப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஜம்மு.காஷ்மீர் பல்கலைக்கழக மருத்துவத் துறையைச் சேர்ந்த இந்துமதப் பேராசிரியரே கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை ஜம்முவில் தீவிரவாதிகள் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் பொதுமக்களில் இருவர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## கருத்தரங்கு

[உடுவில்]

அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்தல் சம்பந்தமான கருத்தரங்குஒன்று 10-ம் திகதி பிற்பகல் நான்கு மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கஉடுவில் கிளையில் நடைபெறஉள்ளது.

## வருடாந்த கூட்டம்

[உடுவில்]

வலிகாமம் தெற்கு பிரதேச சபைகளின் உடுவில் உப அலுவலக சனசமூக நிலையங்களின சமாசத்தின் வருடாந்தக் கூட்டம் திரு. ச. சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது. [109]

## விசர்நாய் கடிக்கு செஞ்சிலுவை சங்க தொண்டர் பலி

[பருத்தித்துறை]

விசர்நாயினால் கடியுண்ட செஞ்சிலுவை சங்க தொண்டரொருவர் விசர்நாய்க்கடித் தடுப்பூசி ஏற்றாமையினால் மரணமானார்.

பருத்தித்துறை கல்லூரி வீதியைச் சேர்ந்த சின்னத்துரை திருச்செல்வம் (வயது 37) என்பவரே விசர் நாய்க்கடியினால் பலியானவராவார்.

இவருக்கு, சுமார் 2 மாதங்களுக்கு முன்னர் புலோலியில் விசர் நாய் கடித்ததாகவும் அவர் நாய்க்கடித்தடுப்பூசி போடாததினால் மரணம் சம்பவித்தது என்றும் தெரிவிக்கப்பட்டது

இவரது மனைவியும் சில நாட்களின்முன் விசர்நாயினால் கடியுண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [52]

## சைக்கிள் கடையில் திருட்டு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரத்தில் உள்ள சைக்கிள் கடை ஒன்று இரவு வேளை உடைக்கப்பட்டு விற்பனைப் பொருட்கள் பணம் உட்பட சுமார் 7,000 ரூபா திருடப்பட்டுள்ளன. [52]

# ★ உலக கிண்ண உதைபந்தாட்டம்; 16 வருடங்களின் பின்னர் தென் ஆபிரிக்கா பங்குபற்ற அனுமதி

(பாரிஸ்)

1998ம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி பிரான்ஸில் நடைபெறவுள்ளது.

1994ம் ஆண்டு உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி அமெரிக்காவில் நடைபெறவுள்ளதை முன்கூட்டியே உலக உதைபந்தாட்டச் சம்மேளனம் அறிவித்துவிட்டது இதைத் தொடர்ந்து, 1998ம் ஆண்டுப் போட்டியை மொரொக்கோவில் நடாத்துவதென்று மேற்படி சம்மேளனம் முன்னர் உத்தியோகப்பற்றற்ற முறையில் தெரிவித்ததைத் தொடர்ந்து, மொரொக்கோ நாடு இப்போட்டியை தனது நாட்டில் நடத்துவதற்கான பெருமளவிலான ஏற்பாடுகளை கடந்த இரு வருடங்களாக மேற்கொண்டு வந்தது.

ஆனால் கடந்தவாரம் சுவிஸ்ஸர்லாந்தில நடைபெற்ற உலக உதைபந்தாட்ட சம்மேளனக் குழுவின் கூட்டத்தில், 1998ம் ஆண்டுப் போட்டியை பிரான்ஸில் நடாத்துவதென முடிவுசெய்யப்பட்டது.பிரான்ஸில் நடாத்துவதா அல்லது மொரொக்கோவில் நடாத்துவதா என எழுந்த சர்ச்சையைத் தொடாந்து நடைபெற்ற வாக்கெடுப்பில் பிரான்சுக்கு ஆதரவாக 12 வாக்குகளும், மொரொக்கோவுக்கு ஆதரதாக 7 வாக்குகளும் கிடைத்தன.

1994ம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெறவிருக்கும் உலக கிண்ணப் போட்டியில் இம்முறை தென் ஆபிரிக்காவும் 16 வருடங்களின் பின்பு கலந்துகொள்ளவிருக்கின்றது.

தென் ஆபிரிக்கா மீது ஐ.நா. விதித்த தடைநீக்கப்பட்டதினால், இம்முறை தென் ஆபிரிக்கா இப்போட்டியில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதே நேரம் யூக்கோஸ்லாவியா மீது ஐ.நா. பொருளாதாரத்தடை விதித்துள்ளதனால் இனிமேல் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் யூகோஸ்லாவியா பங்குபற்றுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு இதுவரைகாலமும சோவியத்யூனியனுக்கு வழங்கப்பட்டுவந்த அங்கீகாரங்கள் அனைத்தையும் இனிமேல் ரஷ்யாவுக்கு வழங்குவதென்றும் மேற்படிக் குழுவினால் தீர்மானிககப்பட்டுள்ளது. (வி

## விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த தடகளப் போட்டிகள் இம்மாதம் 11ம், 12-ம் திகதி நெல்லியடி ம. ம. வி. யில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் 17 கழகங்கள் பங்குபற்றவுள்ளன. [சி]

0 0 0

(பண்டத்தரிப்பு)

சாந்தை விநாயகர் சனசமூக நிலையத்தின் விளையாட்டுப் போட்டியும், கலை விழாவும் இம்மாதம் 11ம் திகதி சனிக்கிழமையன்று நடைபெறவுள்ளன. அன்றைய தினம் முற்பகலில் மரதன் ஓட்டப் போட்டி, சைக்கிள் ஓட்டப் போட்டி உட்பட பல்வேறு போட்டிகளும், இரவு கலை நிகழ்ச்சிகளும பரிசளிப்பும் நடைபெறவுள்ளன. (72)

0 0 0

[பண்டத்தரிப்பு]

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப்போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 10-ம் திகதி வெள்ளிக்கிழமையும், 11-ம் திகதி சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது, (72)

ஃ ஃ ஃ

[பண்டத்தரிப்பு]

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று 8-ந் திகதி புதன் கிழமையன்று வித்தியாலய அதிபர் திரு. ச. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. [72]

## மெய்வல்லுநர் போட்டி

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று 8-ம் திகதி புதன்கிழமை வித்தியாலய அதிபர் ச. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது, பிரதம அதிதியாக பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு. மு. சிவராசரத்தினம் கலந்து கொள்வார். (72)

ஃ ஃ

[பருத்தித்துறை]

வடமராட்சி கிழக்கு மணற்காடு றோமன் கத்தோலிக்க சிரேஷ்ட வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி சென் அன்ரனீஸ் கழக விளையாட்டு மைதானத்தில் அதிபர் மோ. யேசுதாசன் தலைமையில் நடைபெற்றது.

சிவப்பு இல்லம் 306 புள்ளிகளைப்பெற்றுமுதலாம் இடத்தையும் மஞ்சள் இல்லம் 284புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. பிரதமவிருந்தினரான பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு எஸ். செல்லத்துரை பரிசில்களை வழங்கினார். (521

## இன்று பிரியாவிடை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் கடந்த 33 வருடங்கள் சேவையாற்றி அண்மையில் ஒய்வுபெற்ற முன்னாள் அதிபர் வண பிரான்சிஸ் ஜோசப் அடிகளாருக்கு இன்று அக்கல்லூரி பிரியாவிடை வைபவம் ஒன்றை நடாத்தவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு யாழ. பேரன்னை ஆலயத்தில் நடைபெறும் விசேடதிருப்பலி பூசையை அடுத்து, கல்லூரியின் மதுரம்' மண்டபத்தில் மாணவர், ஆசிரியர், பழைய மாணவர், பெற்றோர் ஆகியோர் ஒன்றுகூடி பொதுவரவேற்பொன்றை நடாத்துவார்கள். (வி)

## இன்று உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் தற்போது சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியில், முதல்நாள் ஆட்டங்களில், வைககிங்ஸ், சென் நீக்கிலஸ் கழகங்கள் வெற்றி பெற்றன.

மேற்படி போட்டிகளுக்கு யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. க. குணராசாவும், நிர்வாக உத்தியோகஸ்தர் திரு. வேல்முருகுப்பிள்ளையும் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்கள்.

**இன்றைய ஆட்டங்கள்**

இன்று நடைபெறும் ஆட்டங்களின் முதல் போட்டியில் குருநகர் நீலம்) விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கலைவாணி கழகமும் மற்றைய ஆட்டத்தில் யுத்கார்மல் கழகத்தை எதிர்த்து சென்மேரிஸ் கழகம் மோதும்

## புறப்பாடல் பாடும் புயற்கோல நாடு!

தீர்வுக்கு மனமில்லை அரசிடம்!-கொன்று
தீர்க்கவே மனமுண்டு அவரிடம்!- அட!
பார்வைக்குப் புத்தரின் வார்ப்படம்!- அந்தப்
பாதகர் வரைகிறார் போர்ப்படம்!!

★

வான்குண்டு வந்திங்கு தாலாட்டும்!- உடன்
வருகின்ற ''ஷெல்'' நன்கு சீராட்டும்!
வீண்வம்பிற் பகையிங்கு வாலாட்டும்!-அதை
வேரோடு நீக்கவே போராட்டம்!

★

கோயிலிற் குண்டினைக் கொட்டினார்!-விஷக்
கோலத்தை நன்கவர் எட்டினார்!
வாயினிற் பொய்களை நிரப்பினர்!-அதை
வாரியே புவியெலாம் பரப்பினர்!

★

வானொலிக் கொருபக்க வாதம்!- ரூப
வாஹினி காட்டிடும் பேதம்!
வீரொலி செய்திடும் சேதம்!-அவர்
விற்கிறார் புத்தரின் போதம்!

★

குண்டள்ளி வீசலாம் விமானம்!-அட!
குலையாது என்றும் நம் நிதானம்!
கண்டுள்ள ஈழமே நம் விதானம்!-இனிக்
கவலையும், இன்பமும் சரி சமானம்!

ஜெ. கி. ஜெயசீலன்.

# பௌத்தவிகாரைகளிலிருந்து மஞ்சள் அங்கிகள் மறைவு

(கொழும்பு)

பௌத்த விகாரைகளிலிருந்து அண்மைக்காலங்களில் மஞ்சள் அங்கிகள் மாயமாக மறைந்துவருவதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

நாடெங்கிலுமுள்ள பல பௌத்த விகாரைகளிலிருந்து பௌத்த பிக்குகள் அணியும் மஞ்சள் அங்கிகள் திடீர், திடீரென காணாமல்போவதாக பொலிஸாருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக சில தீய சக்திகள் மஞ்சள் காவி உடை அணிந்து பௌத்த விகாரைகளில் கொள்ளையடித்துவருவதாகவும், இவ்வாறானவர்களே இப்படியான கொள்ளைகளில் ஈடுபடுவதாகவும் கூறப்படுகிறது. [சி]

# பாதுகாப்பு செலவிற்கு 3000 மில்லியன் ரூபா

(கொழும்பு)

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 3000 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது. அரசாங்கத்தின் வருமானம் குறைந்து செலவுகள் அதிகரித்துள்ளது பாதுகாப்புச் செலவு கூடியதன் காரணமாக பாதுகாப்பு வரியை அறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பிரதமரும் நிதி இணைப்பாதுகாப்பு அமைச்சருமான டி. பி. விஜயதுங்கா நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு வரி திருத்தச் சட்ட மூலத்தை நேற்று சமர்ப்பித்து உரையாற்றுகையில் தெரிவித்தார். (பா)

### எட்டு நாள் போரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படைகள் சிறிது சிறிதாகவே முன்னேற முடிவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இந்த யுத்தத்தில் கொல்லப்பட்ட படையினரின் தொகை இன்னும் அதிகமாயிருக்கலாமென ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (சி)

# கொழும்பில் பலத்த மழை; நகரெங்கும் வெள்ளக்காடு

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் பெய்த சில மணி நேர மழையால் நகரெங்கும் பெரும் வெள்ளக்காடானதுடன், வீதிப் போக்குவரத்துகளும் தடைப்பட்டன.

நேற்று முன்தினம் பிற்பகல் பெய்த காற்றுடன் கூடிய பலத்த மழையால் கொழும்பின் பெரும்பாலான பகுதிகள் திடீரெனவெள்ளக்காடானது.

வீதியோரங்களில் நின்ற பாரிய மரங்கள் வேருடன் சாய்ந்ததால் வீதிகளில் தடை ஏற்பட்டு வாகனப் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டது.

உயரமான கட்டிடங்களின் கூரைகள் சிலவும் பறந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர அரசுவிரும்பவில்லை

[கொழும்பு]

யுத்ததத்தை முடிவுக்கு கொண்டுவர அரசு விரும்பவில்லை என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி கொழும்பு மாவட்ட எம். பி. சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்கட்சிகளின் சார்பில் பாதுகாப்பு திருத்த சட்டமூல விவாதத்தை அவர்ஆரம்பித்து உரையாற்றுகையில் கூறியதாவது அரசு கம்பனிதாவ கோரிக்கைக்கு செலவழிக்கும் பணத்தை மீதிப்படுத்திக் கொண்டால் மக்கள் மீது இந்த வரிப்பளுவை சுமத்த வேண்டிய அவசியம் இராது. யுத்தத்தை அரசாங்கம் முடிவுக்கு கொண்டு வர விரும்பவில்லை அவசரகாலத்தை நீடிக்கவாறு பதவியில் இருப்பதையே அரசுவிருப்புகிறது என்றார்.

லங்கா சமசமாஜ கட்சியை சோந்த கேகாலை மாவட்ட எம். பி. அத்தாவுட செனவிரத்ன உரையாற்றுகையில் கூறியதாவது:

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த யுத்தத்தை முடிவுக்கொண்டுவரவேண்டும். அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவில்லை என்றார். [மா]

### முன்னேறி வந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறிய இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் முகாமை முற்றுகையிட முனைந்தனர்.

இந் நடவடிக்கையின்போது இராணுவத்திற்கு உதவியாக ஹெலிகொப்டரிலிருந்து பலத்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

முன்னேறி வந்த படையினரை விடுதலைப்புலிகள் சுற்றிவளைத்து பலத்த தாக்குதலை மேற்கொண்டனர். புலிகளின் தீவிரதாக்குதலினால் படையினர் பின்வாங்கி ஓடினார்கள்.

இம்மோதலில் புலிகள் தரப்பில் 13 புலிகள் வீரச்சாவு அடைந்தனர். [ரி]

# வாடியடியில் தமதுநிலைகளை பலப்படுத்தும் இராணுவம்

(யாழ்ப்பாணம்)

புல்லாவெளி வாடியடிப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் தமது நிலைகளைப் பலப்படுத்தும் முயற்சியில நேற்று ஈடுபட்டனர்.

நேற்று முழுவதும் இத்தீவிர முயற்சியில் படையினர் ஈடுபட்டனர்.

இதேவேளை நேற்று இப்பகுதியில் விமானத்தாக்குதல்கள் மிக குறைவாகவே இடம்பெற்றது. [ரி]

## சார்க் கூட்டம

(கொழும்பு)

சார்க் அமைச்சர்களின் பதினெராவது கூட்டத் தொடர் இன்று கொழும்பில் ஆரம்பமாகிறது

இக்கூட்டம் இருநாட்கள் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. (மா)

### வழிமறிப்பு

1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசு தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப்பகுதியில் தொடர்ந்தும் கடும் யுத்தம் நடைபெற்று வருவதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன.

படையினருக்கு உதவியாக விமானப்படையும், கடற்படையும் மிகக்கடுமையான தாக்குதலை மேற்கொண்டுவருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

### 13 புலிகள்

(1-ம்பக்கத் தொடர்ச்சி]

வாழைச்சேனை), குகநேசன் (தங்கராசா காராளசிங்கம், மட்டக்களப்பு, சேதுராசா (தம்பிராசா கண்ணன், கிரான்), யேசுசிறி (சம்பிராசா இராசதுரை, கல்முனை), ராஜன் (குமாரசாமி கலைச்செல்வம், கிரான்குளம்), புவி (தங்கராசா சந்திரன், மண்டூர்), சொரூபசீலன் (கந்தமுத்து தவராசா, சித்தாண்டி), பவளமூர்த்தி (கணேசசுந்தரம் சதா பாண்டிருப்பு), 2ம் லெப். சிறிகாந்தலிங்கம் (சேதுகாவலபிள்ளை சசதிவடிவேல், மட்டக்களப்பு சுருவில்), தட்சணாமூர்த்தி (முருகையாபிள்ளை தர்மலிங்கம், காரைதீவு, அம்பாறை), தயான் (முத்துவேல் மோகன் மட்டக்களப்பு, பொருவில்), தேவானந்தன் (சங்கரன் மாதவன், அம்பாறை, உமைகுமார் (கணபதி கதிர்காமலிங்கம், பதுளை).

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். [ரி]

# நெய்தல் பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அமைப்புக கலைஞர்களை இணைத்து, விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் 'நெய்தல்' என்னும் ஒலிப்பதிவு நாடாவை உருவாக்கியுள்ளது.

இந்த ஒலிப்பதிவு நாடாவின் வெளியீட்டு விழா, எதிர் வரும் 10ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணிக்கு யாழ். குருநகர் புனித சம்பத திரிசியார் (சென். பற்றிக்ஸ் கல்லூரியில், கடற் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்பொறுப்பாளர் திரு. மறவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவைக் கடற்புலிகளின் தளபதி கங்கை அமரன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

வரவேற்புரையை கடற்புலிகள் மகளிர் முன்னணப் பொறுப்பாளர் செல்வி நளாயினியும், வெளியீட்டுரையை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரையும் நிகழ்த்துவர்.

இதனையடுத்து கடற்புலிகளின் சிறப்புத்தளபதி திரு. சூசை கலைஞர்களைக் கௌரவிப்பார். ஆசியுரையை வண. பிதா யோசேப் ஜீ. ஏ. பிரான்சிஸ் அடிகள் வழங்குவார்.

சிறப்புரைகளை திரு மு. வே. யோ. வாஞ்சிநாதன், விடுதலைப்புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு.செ. தமிழேந்தி, திரு. அ. சா. அரியகுமார், மற்றும் இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் ஆகியோர் ஆற்றுவர்

வலிகாமம் கிழக்கு கடற்புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சங்கீதன் நன்றி கூறுவார்.

சிறப்பு நிகழ்ச்சியாக இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் தாயக எழுச்சிப் பாடல்களை உள்ளடக்கிய இன்னிசைக் கச்சேரியை நிகழ்த்துவார்.

இந்த ''நெய்தல்'' இசைப் பாடல் நாடாவின் இசையும் பாடல்களும் இதுவரை வெளிவந்த பாடல்களினின்றும் வித்தியாசமானதாக அமைந்துள்ளது.

இந்தப் பாடல்களின் இசை வடிவம் எங்களுடைய இசைப் பாடல்களின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.

கடலும், கடல் சார்ந்த பிரதேசமுமான நெய்தல நிலத்தின் போராட்டஉணர்வுகளையும், செயற்பாட்டையும் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் கலையாக வெளிப்படுத்துகின்றன இந்தப் பாடல்கள்.

# பீரங்கித் தாக்குதல்

[பண்டத்தரிப்பு]

காரைநகர்-சுழிபுரம் கடற் பிராந்தியத்தில் சிறிலங்கா கடற்படைக் கப்பலிருந்து கரையோரப்பகுதியைநோக்கி நேற்று பலத்த பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. (72)

# பெட்டிக்குள் வந்த 'தலை'

(கொழும்பு)

தாண்டிக்குளம் தடைமுகாமில் புளொட் அலுவலகத்தில் அநாதரவாக விடப்பட்ட பெட்டி ஒன்றினுள் இருந்து துண்டிக்கப்பட்ட தலை ஒன்று மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

நேற்று முன்தினம் காலை இவ்வாறு அநாதரவாக விடப்பட்ட தலை ஒரு ஆணின் தலை எனவும் இப்பெட்டியை ஒரு பெண்ணே அவ்விடத்தில் விட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### 9 தேச விரோதிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாளிகளுக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது

தனிப்பட்ட தமது தேவைகளுக்காக அற்பசலுகைகளை இராணுவத்திடமிருந்து பெற்று இவர்கள் நாட்டைக் காட்டிக் கொடுத்தார்கள்.

இந்த தேச விரோதிகள் தொடர்பான விபரங்கள் ஏற்கனவே 'ஈழநாடு'வில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. [ரி]

### 18 தமிழர்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பாறை காட்டுப்பகுதி எல்லையில் குடிசைகள் அமைந்து வாழ்ந்து வந்த தமிழர்களே இவ்வாறு சுட்டுக்கொல்லப் பட்டனர்.

நேற்று முன்தினம் இக்காட்டுப் பகுதியைச்சுற்றி பெரும் தேடுதல் நடத்திய படையினர் பொதுமக்கள என்று இனம் காணப்பட்ட நிலையிலும் இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி)

### பலவேகயவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையைத் தொடருவதற்குப் பெருமளவு இராணுவத்தினரும் இராணுவ தளபாடங்களும் மேலதிகமாகத் தேவைப்படுகின்றன.

இதனால் புல்லாவெளி-கட்டைக்காடு - வெற்றிலைகேணியில் நிலை கொண்டுள்ள படையினர் தமது பலத்தினை அதிகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகிறது

இதேவேளை வெற்றிலைக் கேணிக்கு படைக்களபதிகள் சகிதம் நேற்றுமுன்தினம் நேரடியாகச் சென்ற பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா இராணுவ நடவடிக்கை தொடர்வது குறித்தும் படைகளின் அதிகரிப்புக் குறித்தும் அங்குள்ள இராணுவ அதிகாரிகளுடன் உரையாடினர். (ரி)

# கொழும்பில் கருத்தரங்கு

[கொழும்பு]

வடக்கு - கிழக்கு நிலை குறித்து கருத்தரங்கொன்று கொழும்பு கொள்ளுப்பிட்டியில் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் இந்திய தூதர் திரு. ஜா, புலிகளை தடை செய்ய வழிவகுத்த சம்பவங்களும் இலங்கை-இந்தியாவில் அதன் தாக்கங்களும் என்ற தலைப்பில் உரையாற்றுவார் புலிகள் மீதான தடையும் இலங்கையில் அதன் தாக்கங்களும் என்ற தலைப்பில் அமைச்சர் தொண்டமான் உரையாற்றுவார். (சி)

### அ.தி மு.க. தொண்டர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குறித்து இதுவரை அறியப்படவில்லையாயினும் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றுவருவதாக பொலிசார் தரப்பில்தெரிவிக்கப்படுகிறது. (க)

### பிரபாகரன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவதில் இந்தியா அக்கறைகொண்டுள்ளதாகவும், ஆனால் தாங்களாக இலங்கை குச் செல்ல விரும்பும் தமிழ் அகதிகளுக்குச் சகல வசதிகளும செய்து தரப்படும் எனினும் எந்தவொரு அகதியும் கட்டாயபடுத்தித் திருப்பிஅனுப்பப் படமாட்டார் என்றும் தெரிவித்துள்ளார். [க]

# விசர்நாய்கள் அதிகரிப்பு

[அரியாலை]

யாழ் நகர வீதிகளில் விசர் நாய்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதுஇராசவின்தோட்ட சந்தி, மடம் வீதி, வேம்படிவீதி ஆகிய இடங்களில் இரவுநேரங்களில் செல்வோர் மிகவும் கவனமாக செல்லவேண்டிய நிலையில் உள்ளனர். (59

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 08ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a as a News paper at the General Post office Srt Lanka under Licence Number B/10336/8